18th March 1960]

வளியின் மகன் நெசவாளிதான் என்று நாம் எடுத்துக்கொள்வதற்கில்லை என்று சொன்னேன். இரண்டாவதாக, இந்தத் தொழில் நன்றாக நீடித்து நடக்கவேண்டுமென்று சொன்னால், நல்ல உயர்ந்த ரகத் துணிகளை உற்பத்தி செய்யவேண்டும். சாதாரணமாக இப்பொழுது போட்டியில் நடந்துகொண்டிருக்கக் கூடிய ரகத்தையே உற்பத்தி செய்துகொண்டிருந்தால் அதில் ஊதியம் அதிகமாக இருக்காது. 5 லட்சம் தறிகள் இருக்கும் இடத்தில் 1 லட்சம், $1\frac{1}{2}$ லட்சம் தறிகளாக குறைந்துவிட்டால், அதில் வேலை செய்பவர்களுக்கு 100, 120 ரூபாய் அளவுக்கு கிடைக்கக் கூடிய துணிகளை உற்பத்தி செய்யக் கூடும். எல்லோரும் வேஷ்டியே நெய்துகொண்டிராமல், நல்ல ரகமான பெட்ஷீட்கள், வேலைப்பாடு உள்ள மற்ற ரகங்களை நல்ல முறையில் "இம்ப்ரூவ்டு டெவிலிஸ்" மூலம் உற்பத்தி செய்தால் அவர்களுக்கு ஊதியம் உயர்வதற்கு நல்ல திட்டமாக இருக்கும் என்று நான் சொன்னேன். அங்கத்தினர்கள் இந்த விவாதம் வரும்போது அதுபற்றி அவர்களது கருத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRIMATHI A. S. PONNAMMAL: தலைவர் அவர்களே, மதுரையில் நெசவாளிகள் அதிகமாக இருப்பதால், அங்கே ஒரு பயிற்சி நிலையம் நிறுவ அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா? அந்த பயிற்சி எத்தனை மாத காலம் நடைபெறுகிறது?

THE HON. SRI R. VENKATARAMAN: சேலத்திலிருந்து அங்கத்தினர் யாரும் இங்கே இல்லை போல் இருக்கிறது. (சிரிப்பு) தமிழ் நாட்டில் பயிற்சி நிலையம் எங்கு இருந்தாலும் ஒன்றுதான். எல்லா இடத்திலும் இருப்பவர்களும் அங்கு பயிற்சி பெறலாம். ஒவ்வொரு இடத்திலும் இருக்கவேண்டுமென்பதில்லை.

SRI A. GOVINDASAMY: நெசவாளி மகன் நெசவாளியாக இருக்கவேண்டும் என்பதை அமைச்சரவர்கள் ஒத்துக்கொள்ளவில்லையென்று சொன்னார்கள். நெசவாளர்களை வேறு தொழில்களில் ஈடுபடுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா, திட்டம் இருக்கிறதா? இல்லை, இந்த அரசாங்கம் வடநாட்டு முதலாளிகளுக்கு உதவியாக நெசவாளிகளை நசுக்க உத்தேசித்திருக்கிறார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: அதைப் பற்றி கனம் கோவிந்தசாமியவர்கள், ஒரு சிறந்தபிரசங்கம் கைத்தறி மானியக் கோரிக்கை வரும்போது, செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், சட்ட சபையைக் கலந்துகொண்டு புதிதாக அவர்களுக்கு நல்ல முறையிலே ஒரு திட்டம் தீட்ட வேண்டும் என்று யோசனை வைத்திருக்கிறோம். அப்பொழுது விளக்குகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Chemical Testing and Analytical Laboratory

* 478 *Q.*—SRI M. P. SARATHI: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்திலுள்ள "Chemical Testing and Analytical Laboratory"-யில் 1958–59-ம் ஆண்டுகளில் எத்தனை சோதனைகள் நடத்தப்பட்டன?

(ஆ) தனியாருக்காக எத்தனை? அரசாங்க இலாக்காக்களுக்காக எத்தனை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM:

(a)—

Year.	Number of	
	Cases examined	Articles examined
(1)	(2)	(3)
1958	3,107	15,924
1959	2,938	14,512

[18th March 1960

(b)—

Year.	Number of cases examined for — Private parties including Corporation of Madras.	Government Departments.	Number af articles examined for — Private parties includ ng Corporation of Madras.	Government Departments.
(1)	(2)	(3)	(4)	(5)
1958	2	3,105	14	15,910
1959	6	2,932	32	14,480

Atomic Energy

* 479 *Q.*—Sri A. VEDARTHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) அணுசக்தியை விவசாய அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் யோசனை அரசாங்கத்திற்கு உண்டா ?

(ஆ) அது சம்பந்தமாய் என்ன முயற்சி நடைபெறுகிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) A scheme for making a start in this direction by undertaking work on limited and specific problems and training the required personnel at the Indian Agricultural Research Institute, New Delhi and at the Atomic Energy Commission, Trombay, is being drawn up.

Sri A. VEDARATHNAM : என்னென்ன துறையில் அவர்களுக்கு இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது ? அந்தமாதிரிப் பயிற்சியை நமது மாநிலத்திலேயே நடத்துவதற்கு முயற்சி ஏதாவது உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த மாநிலத்தில் கோவையில் ஆராய்ச்சி நிலையம் வைப்பது என்பதில் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. முக்கியமாக ரேடியோ ஆக்டிவ் ஐஸோடோப்பிலிருந்து,

(i) Radiation genetics and plant mutation research.

(ii) Use of Radio tracers in plant physiological research, and

(iii) Use of radio tracers especially P. 32 ins oil and fertiliser research.

ஆராச்சிகள் செய்யவேண்டும்.

Sri K. ANBAZHAGAN : விவசாயத்திற்கு அணுக் கதிரை பயன்படுத்துவதற்கு மின்சார நிலையம் அதைத் தொடர்ந்து அமைக்கப் படவேண்டும் என்பதால், அப்படி அமைக்க முயற்சிகள் எடுக்கப் படுகின்றனவா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அது வேறு விஷயம். அதைப் பற்றியும் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது.

Sri A. GOVINDASAMY : அண்மையில் உலக விவசாய பொருட்காட்சியில் அமெரிக்கன் பெவிலியனில் அடாமிக் எனர்ஜியை விவசாயத்திற்குப் பயன்படுத்துவது பற்றி விளக்கிக்காட்டினார்களே, அதை நம் அதிகாரிகள் பார்த்து அதைப் பயன்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் ஏதாவது எடுக்கப் படுகிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதிகாரிகளும், விவசாயிகளும் பார்த்து வந்திருக்கிறார்கள். பொதுவாக, நான் முன்பு சொன்னது போல், விவசாயத்திற்குப் பயன்படுத்த ஆராய்ச்சி நிலையம் கோவையில் அமைப்பதைப்பற்றி யோசனை செய்யப்பட்டு வருகிறது.